# ரூ.2 கோடி மதிப்பீட்டில் மாணவர்களுக்கான நன்னெறிச் செயல்பாடுகள்!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பதிலுரை...

5 ஆம் பக்கத் தொடர்ச்சி

அதற்கான guidelines-ஐயும் நாங்கள் வழங்கவிருக்கின்றோம். அதுமட்டுமல்ல, சிறுபான்மைப் பள்ளிகள் அங்கீகாரம் பெறுவதில் சிக்கல்கள் இருக்கிறது என்று சொல்கின்றபோது, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மையினர் நலன் துறை சார்ந்து ஒரு ரிப்போர்ட் ஒன்றை உருவாக்கி, அவர்கள் சுலபமாக அதில் apply செய்து கொள்ளலாம் என்கிற அளவிற்கு செய்யப்பட்டிருக்கிறது. சிறுபான்மை மக்கள் என்ன கேட்டிருக்கின்றார்களோ அவற்றை உடனடியாக செய்து தர வேண்டுமென்கிற அளவில், எங்களுடைய பள்ளிக் கல்வித் துறையைச் சார்ந்து நாங்கள் செய்து கொண்டிருக்கின்றோம்.

இந்த மாமன்றத்தின் சார்பாக நான் வைக்கின்ற வேண்டுகோள், அது நன்றியாகக்கூட இருக்கலாம். தமிழ்நாடு முதலமைச்சரைப் பொறுத்தவரைக்கும். இன்றைக்கும் பார்த்தீர்களென்று சொன்னால், புரட்சித் தலைவர் சத்துணவுத் திட்டம் என்கிற பெயரில் அந்தத் திட்டத்திற்கான நிதியொதுக்கப்பட்டு, தொடர்ந்து அந்தத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால், இன்றைக்கு இலட்சோபஇலட்சம் மாணவர்களின் சார்பாக, அவர்களின் பெற்றோர்கள் சார்பாக, ஆசிரியர்கள் சார்பாக, ஏன் இங்கேயிருக்கின்ற நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக, அந்த காலை உணவுத் திட்டத்திற்கு, மு.க. ஸ்டாலின் காலை உணவுத் திட்டம் என்ற பெயரை வைக்க வேண்டுமென்ற கோரிக்கையை (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நிச்சயமாக, அவர் கொண்டு வந்திருக்கின்ற திட்டங்களின் மூலமாக நாள் முழுக்க, வாழ்நாள் முழுவதும் அவர் வாழத்தான் போகின்றார். ஆனால், வரலாற்றில் அவர் பெயர் சொல்லுகின்ற அளவிற்கு இந்தத் திட்டத்திற்கு அவரின் பெயர் வைக்க வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையை வைக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன். இதை எங்கள் பாக்கெட் பணத்திலிருந்து கொடுக்கவில்லை, இது ஒன்றும் எங்கள் கட்சிப் பணம் கிடையாது, இது மக்களுடைய வரிப் பணம்தான். ஆனால், எத்தனை முதலமைச்சர்கள் வந்தாலும், இது போன்ற ஒரு திட்டத்தை சிந்தித்து, அதை கருவாக்கி உருவாக்கக்கூடிய ஒரு தாய் ஸ்தானத்தில் இருக்கின்ற முதலமைச்சரின் பெயரை வைக்க வேண்டுமென்றுதான் நாங்கள் கேட்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், செல்வப்பெருந்தகை அவர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள். இந்த அரசாங்கம் என்பது ஒட்டுமொத்த இந்தியாவிற்கே வழிகாட்டிய அரசாங்கமாக இருக்கிறது, வழிகாட்டியாக இருக்கும்போதும் தம்பட்டம் அடித்துக்கொள்வது கிடையாது என்று இரண்டு நாட்களுக்கு முன்பு பேசும்போது சொன்னார்கள். இதுவும் தம்பட்டம் கிடையாது. தன் பிள்ளை படித்துவிட்டு பட்டம் வாங்க வேண்டுமென்று நினைக்கக்கூடிய தாய் ஸ்தானத்தில் இருக்கக்கூடிய ஒரு தாயோட பெயரைத்தான் வைக்க வேண்டுமென்றுதான் 'மு.க. ஸ்டாலின் காலை உணவுத் திட்டம்' என்ற பெயரை வைக்க வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை வைத்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படித் தொடர்ந்து என்னுடைய துறைச் சார்ந்து ஒவ்வொரு திட்டமாக சொல்லிக்கொண்டே போய்க்கொண்டிருந்தால், அடுத்தடுத்த branch level-ல் கீழே போய் கொண்டிருக்கக்கூடிய நிலைக்கு போய்விடும். அப்படியிருந்தாலும், நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த நான்கு முறை ஒதுக்கிய நிதியை மட்டும் பார்த்தீர்களென்றால், 1,53,836.43 கோடியை பள்ளிக் கல்வித் துறைக்கு மட்டுமே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

### அரசுப் பள்ளி மாணவிகள் என்பது பெருமை!

வட மாவட்டத்தைச் சார்ந்தவர்களின் results குறைந்திருக்கிறது என்று உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள்கூட சொல்லியிருக்கின்றார்கள். இன்றைக்கு மாநில அளவில் பார்த்தோமென்றால், பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வு முடிவுகளைப் பொறுத்தவரைக்கும் 92 சதவிகிதம், 94 சதவிகிதம் என்று நாம் கொடுத்திருக்கின்றோம். வட மாவட்டம் என்று சொன்னதால், நான் சொல்கிறேன். அந்தப் பகுதியைச் சார்ந்திருக்கின்ற மக்கள். குறிப்பாக, நம்முடைய premium institutions மூலமாக 274 பிள்ளைகள் இன்றைக்கு தேர்வாகியுள்ளார்கள். ஒவ்வொருவரும் பெரிய, பெரிய premium institutions-ல் placement ஆகியிருக்கின்றார்கள். ஆனால், ஒட்டுமொத்த இந்தியாவிலேயே மூன்றே மூன்று பிள்ளைகள் மட்டும்தான் Taiwan University-ல் Scholarship-ல் சென்று join செய்திருக்கின்றார்கள். இந்தியாவில் தேர்வு செய்த மூன்று பிள்ளைகளில் 2 பிள்ளைகள் அரசுப் பள்ளியைச் சார்ந்தவர்கள், அதுவும் இருவருமே மாணவியர் என்பது நமக்கு பெருமை. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களைச் சார்ந்தவர்கள் என்பது நமக்கான கூடுதல் பெருமை.

ஆக, நம்மைப் பொறுத்தவரைக்கும் இன்றைக்கு Educationally Backward Blocks (EBBs) என்று சொல்கின்றோம். 44 பிளாக்குகளாக நாம் பிரித்திருக்கின்றோம். ஆனால், நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆட்சிக் காலத்தில், கல்வியில் பின்தங்கிய என்ற நிலை இல்லாத அளவிற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ, அந்தத் திட்டங்களை நாங்கள் தொடர்ந்து செய்துகொண்டிருக்கின்றோம். அதுவும் பள்ளி அளவில் எங்கள் பள்ளி மிளிரும் பள்ளி என்கிற அளவில் சுத்தமாக வைத்துக்கொள்வதாக இருந்தாலும்சரி, தனியார் பள்ளியில் மட்டும் Annual Day கொண்டாடுகிறார்கள். அரசுப் பள்ளியில் Annual Day கொண்டாடுவதில்லை என்ற குறைபாடு இருந்தது. பல வருடமாக ஒரு மாணவன் அரசுப் பள்ளியில் படித்தாலும், அவனின் திறமையை பெற்றோர் முன்னிலையிலும், மற்றவர்கள் முன்னிலையும் காண்பிக்க வேண்டுமென்று ஆசைபடுகின்றபோது, ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் கடைசி வாரத்தில் Annual Day நடத்த வேண்டுமென்று முடிவெடுத்து, தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கின்றோம்.

## 'திசைதோறும் திராவிடம்' திட்டம் விரிவாக்கம்!

### கனவு ஆசிரியர் திட்டத்தின் மூலம் புது யுக்தி!

அதேபோல, கனவு ஆசிரியர் திட்டத்தின் மூலமாக ஏறத்தாழ 380 ஆசிரியர்களை நாங்கள் தேர்ந்தெடுத்திருக்கின்றோம். அவர்களின் செயல்பாடு, அவர்கள் எப்படி பாடம் நடத்தியிருக்கின்றார்கள், எந்தமாதிரியான புது யுக்திகளை பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதையெல்லாம் கருத்தில்கொண்டு, தனியாக ஒரு குழுவின் மூலமாக தேர்வு செய்திருக்கின்றோம். அதில் 55 ஆசிரியர்கள் நோர்டிக் நாடுகளுக்கு ஆகஸ்ட் மாதத்தில் அனுப்பி வைக்கவிருக்கின்றோம்

மீதம் உள்ளவர்களுக்கு இங்கே இருக்கின்ற Dehradun-க்கு நாங்களே அழைத்து சென்று வந்திருக்கிறோம். இப்படி ஒவ்வொரு முறையும் நம்முடைய தமிழ்நாட்டினுடைய மாணவர்களாக இருந்தாலும் சரி, ஆசிரியர்களாக இருந்தாலும் சரி. இங்கு உறுப்பினர்கள் பேசும்போது ஆசிரியர் சார்ந்த பல கோரிக்கைகள் இருக்கின்றன, உண்மைதான், இல்லை என்று சொல்லவில்லை. அதை படிப்படியாக,- உறுப்பினர் ச. மாங்குடி அண்ணன் அவர்கள் பேசும்போதுகூட, பகுதிநேர ஆசிரியர்களுக்கு 12,500 ரூபாய் நாம் வழங்குகிறோம் என்று சொன்னார்கள். உண்மைதான். ஒரு காலத்தில் பகுதிநேர ஆசிரியர்கள் 8,000 ரூபாய் என்று இருந்தது. அதை 10,000 ரூபாயாக மாறியது. பிறகு 2,500 ரூபாய் அதிகம் கொடுத்தது மட்டுமல்ல, அவர்களுக்கான வயது வரம்பை அதிகப்படுத்தியிருக்கிறோம். அவர்களுக்கான transfers-ஐ நாம் கொடுத்து இருக்கிறோம். இப்படி ஒவ்வொன்றாக செய்யும்போது கண்டிப்பாக அவர்கள் கேட்கின்ற கோரிக்கைகள் வருகின்ற காலத்தில் நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கையை நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இங்கே பல சட்டமன்ற உறுப்பினர்கள் வைத்திருக்கின்ற கோரிக்கைகள் பொறுத்தவரையில் வெட்டுத் தீர்மானங்களாக இருந்தாலும், இங்கே பேசிய உறுப்பினர்களாக இருந்தாலும், பல விவாதத்திற்கு நான் பதில் சொல்லியிருக்கின்றேன். அதையெல்லாம் உள்வாங்கிக்கொண்டு, உங்கள் வெட்டுத் தீர்மானங்களை நீங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை திரும்பப்பெறவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அதுமட்டுமல்ல வெட்டுத் தீர்மானமாக இருந்தாலும், கோரிக்கைகளாக இருந்தாலும், நாங்கள் இன்றைக்கு உங்களிடம் ஒவ்வோரு வருடத்தில் என்னென்ன செய்திருக்கிறோம் என்று table செய்திருக்கிறோம். அதைப் பார்த்து, ஒன்றே ஒன்று மட்டும் சொல்கிறேன். இவ்வளவு செய்தவர்கள் இதையும் செய்யமாட்டார்களா என்ற எண்ணத்தை உங்களுக்கு விதைக்கின்ற விதத்தில் எங்களுடைய செயல்பாடுகள் இருக்கும் என்பதை இந்தநேரத்தில் நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி 25 அறிவிப்புகள் இருக்கின்றது. அதன் தலைப்பை மட்டும் நான் படித்துவிடுகிறேன்.

**1. அரசுப் பள்ளிகளில் உயர்தொழில் நுட்ப ஆய்வகங்களைத் தரம் உயர்த்துதல்**

அரசுப் பள்ளி மாணவர்கள் கணினித் தொழில்நுட்பம் மற்றும் குறியீடுகளை நடைமுறைப் பயிற்சியின் மூலம் கற்றுத் தேர்வதற்கு அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் செயல்பட்டுவரும் உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப படிப்படியாகத் தரம் உயர்த்தப்படும். முதற்கட்டமாக 2024-2025 ஆம் கல்வியாண்டில் 1000 மாணவர்களுக்கு மேல் பயின்றுவரும் அரசுப் பள்ளிகளில் உள்ள உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் ரூ.58 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்படும்.

**2. பாரத சாரண சாரணிய இயக்கத்தின் வைரவிழா**

பாரத சாரண சாரணிய இயக்கத்தின் பொன்விழாக் கொண்டாட்டம் 2000 ஆம் ஆண்டில் தமிழகத்தில் நடைபெற்றது. அப்போது முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இவ்வாண்டு பாரத சாரண சாரணிய இயக்கத்தின் வைர விழா ஆண்டாகும். இதனையொட்டி, தேசிய அளவிலான முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு வைர விழா ஜாம்போரி (Diamond Jubilee National Jamboree) ரூ.10 கோடி மதிப்பீட்டில் நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

காலநிலை மாற்றம் சுற்றுச்சுழல் பாதுகாப்புக் கல்வி பற்றி இன்றைக்கு கேட்டிருந்தார்கள். அதையும் இந்தப் பாடத்தில் நாங்கள் இணைத்து இருக்கின்றோம்.

**3. காலநிலை மாற்றம் சுற்றுச்சூழல் பாதுகாப்புக் கல்வி**

இயற்கையோடு இணைந்து மாணவர்களை இயற்கைச் சூழலை நேசிக்கச் செய்வதன் மூலம் காலநிலை நெருக்கடி மற்றும் பல்லுயிர் இழப்பு போன்ற உலகளாவிய பிரச்சினைகளைத் தீர்க்கமாக அறிந்து அதற்கான தீர்வுகளை மாணவர்களே கண்டறியும் வகையில் உரிய பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டம் ரூ.2.32 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**4. ஆளுமைத் திறன் மேம்பாட்டுச் செயல்பாடுகள்**

அனைத்துப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே தலைமைப் பண்பை வளர்க்கும் வகையில், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் பெயர்களில் மாணவர் குழுக்கள் அமைத்து, மாணவத் தலைவர் மற்றும் மாணவ அமைச்சர்கள் தெரிவு செய்யப்படுவர். இதன்மூலம் மாணவர்களிடையே அரசியல் அறிவு சார்ந்த அனுபவங்கள் மற்றும் ஆளுமைத் திறன் மேம்பட, மாதிரி சட்டமன்றம் மற்றும் மாதிரி பாராளுமன்றம் நடத்தப்படும். இதற்காக தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படும். இத்திட்டம் ரூ.2 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

ஆளுமைத் திறன் மேம்பாட்டுச் செயல்பாடுகள் குறித்து குறிப்பாக மாணவர்கள் மத்தியில் ஒரு தேர்தலை நடத்தி அமைச்சர்கள் என்றால் என்ன? நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்றால் என்ன? ஒவ்வொருத்தரும் எதற்கெல்லாம் பொறுப்பேற்றுக்கொள்ளவேண்டுமென்று என்ற அளவிற்கு அதை செய்திருக்கின்றோம்.

**5. 6 முதல் 9 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு அடிப்படைக் கணினி அறிவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவுத் திறன்**

வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப மாணவர்களைத் தயார் செய்வதற்காகவும் அவர்களது கற்றல் அடைவினைக் கணினி வழி மதிப்பிடுவதற்காகவும் உயர்தொழில்நுட்பக் கணினி ஆய்வகங்கள் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் செயல்பட்டு வருகின்றன. மேலும், மாணவர்களுக்குக் கணினிசார் அடிப்படை அறிவியலையும், செயற்கை நுண்ணறிவுத்திறன் மற்றும் அதனைப் பயன்படுத்தும் நுட்ப அறிவியலையும் கற்பிக்கும் வண்ணம் பாடத்திட்டம் தயார் செய்து ஆசிரியர்களுக்குப் பயிற்சியும், மாணவர்களுக்கு மென்பொருள் மற்றும் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) சார்ந்த அடிப்படைத்திறன்களும் கற்றுக் கொடுக்கப்படும்.

ஏற்கெனவே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் சா. மாங்குடி அண்ணன் அவர்கள் ஒன்றாம் வகுப்பு முதல் கேட்டீர்கள். இது 6 ஆம் வகுப்பு முதல் இது கலைஞர் அவர்களுடைய கனவுத் திட்டம். அதை கொண்டு வந்திருக்கிறோம்.

**6. அரசு உதவி பெறும் பள்ளிகளில் உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள்**

அரசுப் பள்ளிகளில் உயர்தொழில் நுட்ப கணினி ஆய்வகங்கள்அமைக்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக இவ்வாண்டு, அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் ரூ.42 கோடி செலவில் உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் அமைக்கப்படும்.

இது ஏற்கெனவே, நாம் சிறுபான்மையினர் பள்ளிகளுக்கு ஜெ. முகம்மது ஷாநவாஸ் நீங்கள் கேட்டிருந்தீர்கள்.

**7. எந்திரனியல் ஆய்வகங்கள் (RoboticsLabs)**

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களிடம் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறனை வளர்க்கவும், குழுவாக இணைந்து செயல்படக்கூடிய திறனைக் கற்றுக் கொள்ளவும், படைப்பாற்றலை வளர்க்கவும் மாவட்டத்திற்கு ஒரு பள்ளி என்ற அளவில் 38 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் எந்திரனியல் ஆய்வகம் (RoboticsLab) ரூ.15.43 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

RoboticsLabs-எந்திரனியல் கொண்டு வந்திருக்கிறோம்.

**8. பல்வகைத் திறன் பூங்கா (Multi-Sensory Park)**

மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளின் புலன் உணர்வுத்திறன், அறிவுத்திறன், பெருந்தசை இயக்கத்திறன் மற்றும் நுண்தசை இயக்கத்திறன் ஆகியவை மேம்படுவதற்காக, அவர்களின் பல்வகைப் புலன்கள் தூண்டப்பட்டு விளையாட்டு வாயிலாகக் கற்றல் அனுபவங்களைப் பெறத்தக்க வகையில் ஒரு மாவட்டத்திற்கு ஒரு "பல்வகைத் திறன் பூங்கா" என 38 மாவட்டங்களில் ரூ.3.80 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

இது மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளின் புலன்கள் Multi-Sensory Park. இது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒன்று என்று 3.8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அதை செய்ய இருக்கின்றோம்.

**9. அகல் விளக்கு**

அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவிகள் எந்தவித இடர்பாடும் இன்றித்தொடர்ந்து பள்ளிக்கு வருகைப் புரியும் பொருட்டு அவர்களுக்கு உடல் ரீதியாகவும், மனரீதியாகவும், சமூக ரீதியாகவும் ஏற்படும் இடையூறுகளில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், இணையதள பயன்பாடுகளைப் பாதுகாப்பாகக் கையாள்வது குறித்து வழிகாட்டுதல் வழங்கவும் ஆசிரியைகளைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்படும். இவர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்கு "அகல் விளக்கு" என்ற திட்டம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இது மாணவிகளுக்கான திட்டம்.

**10. கலைத்திருவிழா - தொடக்கப் பள்ளிகளுக்கு விரிவாக்கம்**

6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களின் கலைத் திறனை வெளிப்படுத்தும் வகையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் கலைத் திருவிழா நடைபெற்று வருகிறது. அதனைத் தொடர்ந்து இக்கல்வியாண்டு முதல் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களும் பங்கேற்கும் வகையில் கலைத் திருவிழா நடத்தப்படும்.

இது 6 முதல் இருந்து 10 வகுப்புவரை இருந்தால் போதாது. ஒன்றாம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற பிள்ளைகளுடைய திறமையும் கொண்டு வரவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

**11. உயர்கல்வி நிறுவனங்களில் சேரும் அரசுப் பள்ளி மாணவர்களின் கல்விச் செலவினை ஏற்றல்**

அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று, நம் நாட்டில் செயல்பட்டு வரும் தலைசிறந்த உயர் கல்வி நிறுவனங்களில் சேரும் அனைத்து மாணவர்களின் கல்விச் செலவினை அரசே ஏற்றுக்கொள்ளும். மேலும், அயல் நாட்டு உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி உதவித் தொகை பெற்றுச் சேரும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு அவர்கள் அக்கல்வி நிறுவனத்தில் சேர்வதற்காகச்செல்லும் முதல் பயணத் தொகை முழுவதையும் இவ்வரசே ஏற்றுக்கொள்ளும். இதற்கென ஆண்டுதோறும் ரூ.6 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

**12. தமிழ்நாடு தகவல் தொடர்பு மற்றும் தொழில் நுட்பவியல் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

"நம்ம School நம்ம ஊரு பள்ளி" திட்டத்தின் வாயிலாகத் தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளுக்குப் பங்களிப்புகளைத் திரட்டுவதற்கும் மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கும் தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனத்துடன் (ICTACT) புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) மேற்கொள்ளப்படும்.

**13. மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தை தகைசால் நிறுவனமாகத் தரம் உயர்த்துதல்**

திருச்சிராப்பள்ளி, மதுரை, ஈரோடு, புதுக்கோட்டை, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய ஆறு மாவட்டங்களில் செயல்பட்டுவரும் ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் ரூ.41.63 கோடி மதிப்பீட்டில் தகைசால் நிறுவனங்களாகத் தரம் உயர்த்தப்படும்.

**14. ஆசிரியர்களுக்குத் திறன்வளர் பயிற்சி**

நேர்த்தியான கற்பித்தல் அணுகுமுறைகளை வகுப்பறையில் செயல்படுத்துபவராக, ஈடுபாடும் பங்களிப்பும் கொண்ட ஏதுவாளராக, சிறந்த ஆலோசகராக, படைப்பாற்றலில் மேம்பட்டவராக, கூர்சிந்தனை பெற்ற ஆராய்ச்சியாளராக, இவை அனைத்தையும் ஒருங்கே பெற்ற பன்முகத் திறமையாளராக ஆசிரியர்களை மேம்படுத்தும் வகையில் ரூ.3.15 கோடி மதிப்பீட்டில் திறன் வளர் பயிற்சி வழங்கப்படும்.

**15. ஆசிரியர்களுக்குத் தொல்லியல் பயிற்சி**

தமிழர் நாகரிகம், பண்பாடு, தொன்மையின் சிறப்பு மற்றும் தமிழகமெங்கும் விரவியிருக்கும் தொல்லியல் தலங்கள் குறித்த தகவல்களை மாணவர்களுக்குச் சிறப்பாகக் கொண்டு சேர்க்கும் வண்ணம் 1000 ஆசிரியர்களுக்குத் தொல்லியல் சார்ந்த பயிற்சி வழங்கப்பட்டது. இவ்வாண்டில் இரண்டாம் கட்டமாக, மேலும் 1000 ஆசிரியர்களுக்கு ரூ.3 கோடி மதிப்பீட்டில் தொல்லியல் பயிற்சி வழங்கப்படும்.

**16. மாணவர்களுக்கான நன்னெறிச் செயல்பாடுகள்**

மாணவர்களின் உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கும் பொருட்களைப் பயன்படுத்துதலை அறவே தவிர்க்க உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, உயர்கல்வித் துறை ஆகியவற்றுடன் சேர்ந்து கூட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இதற்காக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயிற்சி மற்றும் வழிகாட்டுதல் வழங்கப்படும். இத்திட்டம் ரூ.2 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**17. தூத்துக்குடியில் மாவட்ட மைய நூலகத்திற்கு புதிய கட்டடம்**

தூத்துக்குடி மாவட்டத்தில் வாசகர்கள், மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் மாவட்ட மைய நூலகத்திற்கு நவீன வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் ரூ.6 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**18. பார்வைத் திறன் குறைபாடுடைய மாணவர்களுக்கான கணினி எழுத்துணரி மென்பொருள்**

பார்வைத் திறன் குறைபாடுடைய மாணவர்கள் நலனுக்காக மாவட்ட மைய நூலகங்களில் கணினி மற்றும் எழுத்துணரி மென்பொருள் ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

**19. அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் சிறார் அறிவியல் பூங்கா**

அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு வருகை தரும் சிறுவர்களின் அறிவியல் அறிவினை மேம்படுத்தும் வகையில் அறிவியல் சாதனங்கள் கொண்ட சிறார் அறிவியல் பூங்கா ரூ.80.24 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**20. செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பஉதவியுடன்நூலகங்களுக்கான புதிய சேவைகள்**

செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்ப உதவியுடன் மொழிபெயர்ப்பு, நூல் சுருக்கம், மறு உருவாக்கம், காணொளிகள் எழுத்தாக்கம் போன்ற புதிய சேவைகள் மாவட்ட மைய நூலகங்கள் மற்றும் முழுநேரக் கிளை நூலகங்களில் வாசகர்கள் பயன்பெறும் வகையில், அண்ணா நூற்றாண்டு நூலகம் மற்றும் கலைஞர் நூற்றாண்டு நூலகம் மூலம் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**21. சொந்த நூலகங்களுக்கு விருது**

தமிழ்நாடு அரசு வீடுதோறும் நூலகங்கள் அமைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு மாவட்டம் தோறும் புத்தகத் திருவிழாக்களை நடத்தி வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் வீடுதோறும் நூலகங்கள் அமைத்துச் சிறப்பாகப்பயன்படுத்தி வரும் தீவிர வாசகர்களைக் கண்டறிந்து ஊக்குவிக்க ரூ.1.14 இலட்சம் மதிப்பீட்டில் சொந்த நூலகங்களுக்கான விருது வழங்கப்படும்.

**22. "திசைதோறும் திராவிடம்" திட்ட விரிவாக்கம்**

தமிழ் இலக்கியம், தமிழ்நாட்டின் வரலாறு மற்றும் பண்பாட்டை எடுத்துக்காட்டும் நூல்களை ஆங்கிலம் மற்றும் தென்னிந்திய மொழிகளில் மொழி பெயர்ப்பதற்காகச் செயல்படுத்தப்பட்டு வரும் "திசைதோறும் திராவிடம்" என்ற திட்டம் ரூ.2 கோடி மதிப்பீட்டில் பிற இந்திய மொழிகள் மற்றும் வெளிநாட்டு மொழிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

**23. மிளிரும் தமிழ்நாடு**

தமிழ்நாட்டின் பண்பாடு, கட்டடக் கலை, சிற்பக்கலை, நாட்டுப்புறக் கலைகள், தனித்துவமான உணவு வகைகள், புவிசார் குறியீடுகள் போன்றவற்றைக் உள்ளடக்கிய புகைப்பட ஓவிய நூல்கள் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் "மிளிரும் தமிழ்நாடு" என்ற பெயரில் பரிசுப் பதிப்புகளாக வெளியிடப்படும்.

**24. பட்டயக் கணக்காளர் தேர்வு நூல்கள்**

வணிகவியல் மற்றும் கணக்கியல் பாடங்களைப் பயிலும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் பட்டயக்கணக்காளர் அடிப்படைத் தேர்வுக்கான நூல்கள் தமிழ் கலைச் சொற்களோடு கூடிய வெளியீடாக ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் வெளியிடப்படும்.

**25. பாடநூல் கழக நூல்களின் விற்பனையை இணைய வழியில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் விரிவுபடுத்துதல்**

இணையதள மேம்பாடு மற்றும் விற்பனை முகவர்கள் மூலமாக தேசிய மற்றும் சர்வதேச அளவில் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகப் புத்தகங்களை விற்பனை செய்திட ஏதுவாக விற்பனைக்கான இணைய தளம் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

என மொத்தம் 25 அறிவிப்புகள் எங்களுடைய துறை சார்ந்திருக்கின்ற அதிகாரிகள், எங்களுடைய Principal Secretary J. குமரகுருபரன், திருமதி கஜலட்சுமி, எங்களுடைய பாடநூல் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, இளம்பகவத், திருமதி ஆர்த்தி, வெங்கடபதி, உள்ளிட்ட அனைவருக்கும், குறிப்பாக தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய Chief Secretary, அவர்கள் துறையை சார்ந்த Secretary-1 அவர்கள் சார்ந்திருக்கின்ற அனைத்து அதிகாரிகளுக்கும், எங்களுடைய இயக்குநர், துணை இயக்குநர், இணை இயக்குநர் என்று பள்ளி அளவில் இருக்கின்ற teaching staff, non-teaching staff வரையில் இருக்கும் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இந்த அளவில் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பதிலுரையாற்றினார்.

---

# சேரன்மாதேவி ஒன்றியக் கழக முன்னாள் செயலாளர் டி.ஆறுமுகம் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன் 26-

திருநெல்வேலி மாவட்டம் ஒருங்கிணைந்த சேரன்மாதேவி ஒன்றியக் கழக முன்னாள் செயலாளர் டி.ஆறுமுகம் அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்ததும் கழகத்தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அவர்களது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

இது குறித்து கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

திருநெல்வேலி மாவட்டம் ஒருங்கிணைந்த சேரன்மாதேவி ஒன்றியக் கழக முன்னாள் செயலாளராகக் கழகப் பணியாற்றிய செயல்வீரர் டி.ஆறுமுகம் அவர்கள் உடல்நலக்குறைவால் மறைவெய்தினார் என்று அறிந்து வருந்தினேன்.

வளர்த்து ஆளாக்கிய தனது தந்தையாரை இழந்து தவிக்கும் சேரன்மாதேவி கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஆ. முத்துப்பாண்டி அவர்களுக்கும் அவரது குடும்பத்தாருக்கும், நெல்லை மாவட்ட உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

## தலா ரூபாய் 1 கோடி நஷ்டஈடு கேட்டு

# மருத்துவர் ராமதாஸ் - அன்புமணி ராமதாசுக்கு நோட்டீஸ்!

## கழக எம்.எல்.ஏ.க்கள் உதயசூரியன் - வசந்தம் கார்த்திகேயன் நோட்டீஸ்!

சென்னை, ஜூன் 26 –

கள்ளக்குறிச்சி சம்பவத்தில் கழக அரசு கடும் நடவடிக்கை எடுத்தும் கற்பனையாக, பொய்யாக அவதூறு பரப்புவதா? எனக் கேட்டு பா.மா.க. நிறுவனத் தலைவர் மருத்துவர் இராமதாசு மற்றும் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் ஆகியோர் மீது கழக எம்.எல்.ஏ.க்கள் உதயசூரியன், வசந்தம் கார்த்திகேயன் ஆகியோர் ஒரு கோடி ரூபாய் நஷ்ட ஈடு கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளனர்.

கள்ளக்குறிச்சி விஷச்சாராய மரணங்கள் தொடர்பாக வெளியிட்ட அறிக்கைகளுக்காகப் பா.ம.க. நிறுவனத் தலைவர் மருத்துவர் இராமதாசு மற்றும் தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் ஆகியோருக்குத் தி.மு.க.சட்டமன்ற உறுப்பினர்கள் டி.உதயசூரியன் (சங்கராபுரம் தொகுதி) மற்றும் வசந்தம் கார்த்தி கேயன் (ரிஷிவந்தியம் தொகுதி) ஆகியோர் பி.வில்சன் அசோசியேட்ஸ் மூலமாக வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பியுள்ளனர்.

மருத்துவர் இராமதாசு, மருத்துவர் அன்புமணி இராமதாசு இந்த நோட்டீஸைப் பெற்றுக்கொண்ட 24 மணி நேரத்துக்குள், ஏதேனும் ஒரு முன்னணித் தமிழ், ஆங்கில நாளேட்டின் ஒரு பதிப்பின் வாயி லாகவும் தங்கள் சமூக வலைத்தளப் பக்கங்களின் வாயிலாகவும் தங்களிடமும் கள்ளக்குறிச்சி மக்களிடமும் நிபந்தனை யற்ற மன்னிப்பு கோர வேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்குத் தலா ஒரு கோடி ரூபாயை இழப்பீடாக வழங்க வேண்டும்.

இந்த நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள் ளது போன்றோ வேறு வகையிலோ பொய்யான, ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை வைப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும் எனச் சட்டமன்ற உறுப்பினர்கள் உதயசூரியன், வசந்தம் கார்த்திகேயன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

---



புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மகளிர் அணி தலைவரும்,மாவட்ட ஊராட்சி குழு தலைவருமான ஜெயலெட்சுமி – தமிழ்செல்வன் இல்ல திருமண விழாவை மாவட்டச் செயலாளர்,அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை ஏற்று நடத்திவைத்து மணமக்கள் த.ரஞ்சித்குமார்–பி.யமுனா ஆகியோரை வாழ்த்தினார். சுற்றுசூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன்,எம்.எம்.அப்துல்லா எம்பி,டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ.,மாநில இலக்கிய அணி துணை தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், மேயர் திலகவதிசெந்தில், மாநகர செயலாளர் மிசா.ஆறுமுகம் செந்தில்,தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர், நலவாரிய உறுப்பினர் ரெ.தங்கம்,ஒன்றிய செயலாளர்கள் மு.க.ராமகிருஷ்ணன், கே.பி.கே.டி. தங்கமணி, தவ.பாஞ்சாலன், ஒன்றிய பெருந்தலைவர்கள் கே.ஆர்.என்.போஸ், வள்ளியம்மைதங்கமணி, மாலாராஜேந்திரதுரை உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்